*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி-சென்னை-4*
*14 08 2025* **THURSDAY** *12 40* **PM**
*ஆகாஷவாணி - செய்திகள்*

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

1. தேசப்பிரிவினை கொடூரங்களின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
   **** நல்லிணக்கத்தை வலுப்படுத்த வேண்டிய பொறுப்பை இந்நாள் நமக்கு நினைவுபடுத்துவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. வீரதீர செயல் மற்றும் சிறப்பான சேவைக்கான காவலர் பதக்கம் இந்த ஆண்டு ஆயிரத்து 90 பேருக்கு வழங்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
3. உலகின் முன்னணி நாடாக இந்தியா திகழ்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.
4. நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்ய மாற்றங்களை அறிமுகப்படுத்துவது அவசியம் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி வலியுறுத்தியுள்ளார்
5. மலேசியா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Isha Rani Baruah காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>>><<<<<<

தேசப்பிரிவினை கொடூரங்களின் நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், நமது வரலாற்றின் துயரமான காலகட்டத்தில் எண்ணற்ற மக்கள் அனுபவித்த கொடுமைகளை நினைவுகூருவதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் நல்லிணக்கத்தை வலுப்படுத்த வேண்டிய பொறுப்பை இந்நாள் நமக்கு நினைவுபடுத்துவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தேசப்பிரிவினையின் போது நேரிட்ட துயரச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களின் வேதனையை நினைவுகூருவதாக தெரிவித்துள்ளார்.

லட்சக்கணக்கான மக்கள் வன்முறைச் சம்பவங்களுக்கு ஆளாகி, இடம்பெயர வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானதாகவும் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளையொட்டி, சென்னை, ஆளுநர் மாளிகையில் தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மத்திய மக்கள் தொடர்பகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியை ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பத்திரிகை தகவல் அலுவலக தென்மண்டல தலைமை இயக்குநர் திரு. வி. பழனிசாமி, மத்திய மக்கள் தொடர்பக இயக்குநர் திரு. ஜெ. காமராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

>>>>>>>><<<<<<

சுதந்திர தினத்தை ஒட்டி, காவல்துறை மற்றும் ஊர்க்காவல் படையினருக்கான வீரதீர செயலுக்கான பதக்கம் இந்த ஆண்டு ஆயிரத்து 90 பேருக்கு வழங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

தலைசிறந்த சேவைக்கான குடியரசுத்தலைவரின் பதக்கம் தமிழகத்தைச் சேர்ந்த கூடுதல் டிஜிபி திருமதி. பாலநாகதேவி, ஐ.ஜி-க்கள் திரு. கார்த்திகேயன், திருமதி. லெஷ்மி உட்பட 99 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

பெருமைக்குரிய சேவையாற்றியோருக்கான பதக்கம் 758 பேருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருதுக்கு தமிழகத்திலிருந்து காவல்துறை கண்காணிப்பாளர்கள் திருமதி. ஜெயலெஷ்மி, திருமதி. விமலா, துணை ஆணையர் திரு. சக்திவேல் உட்பட 21 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

வீர தீர செயலுக்கான பதக்கம் 233 பேருக்கும் வழங்கப்படும் என்றும் மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<

இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கத்தின் கீழ், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பேரணிகள் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

(சவுண்ட் பைட் – டியூன் 8 செகண்ட்ஸ்)

மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், புதுதில்லியில் உள்ள தமது இல்லத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

*சமூகவலைதளத்தில் இதனை பகிர்ந்துள்ள அவர், நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட வீரர்களின் தியாகத்திற்கு மரியாதை செலுத்தும் வகையில், அனைவரது இல்லங்களிலும் தேசியக்கொடியை ஏற்றுவோம் என்று தெரிவித்துள்ளார்.*

*தமிழகத்தின், திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் பிஜேபி சார்பில் நடைபெற்ற தேசியக்கொடி பேரணியை மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தொடங்கி வைத்தார்.*

*(சவுண்ட் பைட் – கோஷம் 10 செகண்ட்ஸ்)*

*நிகழ்ச்சியில் பேசிய அவர், 2047ஆம் ஆண்டில் இந்தியாவை உலகின் முன்னணி நாடாக திகழச் செய்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – எல். முருகன் 53 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<*

*2047ஆம் ஆண்டில், நாட்டின் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்ய பல்வேறு மாற்றங்களை அறிமுகப்படுத்துவது அவசியம் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், எதிர்கால எரிசக்தி தேவைகளுக்கு ஒருங்கிணைந்த நீடித்த தொலைநோக்கு கொள்கையை உருவாக்குவது குறித்து புதுதில்லியில் நடைபெற்ற ஆலொசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.*

*எரிசக்தி துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொண்டு, சுயசார்பு அடைவதற்கான வழிமுறைகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக திரு. ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.*

*>>>>>>><<<<<<*

*நாடுமுழுவதும் உள்ள மக்களுக்கு, குழாய் மூலம் குடிநீர் வழங்கும் ஜல்ஜீவன் இயக்கம் தொடங்கப்பட்டு, இன்றுடன் 6 ஆண்டுகள் நிறைவடைகிறது.*

*இதுகுறித்து மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வீடுகளுக்கே நேரடியாக குடிநீர் வழங்கப்படுவதன் மூலம் மக்களின் நேரம் மிச்சமாவதுடன், அவர்களது ஆரோக்கியம் மேம்பட்டு, வாழ்க்கையில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.*

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முயற்சிகளே இதற்கு காரணம் என்றும் திரு. பியூஷ் கோவல் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<

நாமக்கல்லை தலைமையிடமாக கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை, முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்தார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை சார்பில் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு அரங்கங்களை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

மேலும், செங்கல்பட்டு அருகே, ஜப்பான் நிறுவனம் சார்பில் 700 கோடி ரூபாய் முதலீட்டில், மின்சாதனங்கள் உற்பத்தி ஆலை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்தானது.

>>>>>>><<<<<

நாடு சுதந்திரம் அடைந்தவுடன் தில்லி செங்கோட்டையில் ஏற்றப்பட்ட முதலாவது தேசியக்கொடி, தமிழகத்தின் வேலூர் மாவட்டம். குடியாத்தம் கைத்தறி நெசவாளர்களால் தயாரிக்கப்பட்டதாகும்.

இது தமிழக கைத்தறி நெசவாளர்களுக்கு கிடைத்த பெருமை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – மோகன் 50 செகண்ட்ஸ்)

இதனிடையே, சுதந்திர தினத்தை ஒட்டி, பல வடிவங்களில் தேசியக்கொடி தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக விருதுநகர் மாவட்டம், சிவகாசியைச் சேர்ந்த காசிராஜன் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் – தயாரிப்பாளர் 40 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<

மலேசியா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Isha Rani Baruah காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

***மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 15-13, 15-13 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Nurtertiati-யை வென்றார்.***

***ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் Alap Mishra 8-15, 15-8, 15-10 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Lee Shun Yang-ஐ வென்றார்.***

***>>>>>><<<<<<***